Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic

# இந்தியன் வங்கியின் 30 செப்டம்பர் 2026 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான நிதி முடிவுகள்




சென்னை 16, அக்டோபர் 2026: மொத்த வணிகம் 14.22% அதிகரித் திருப்பது, அனைத்து பிரிவுகளிலும் எட்டப் பட்ட சிறப்பான வளர்ச்சியை பிரதி பலிக்கிறது.

சில்லறை, விவசாயம் மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் (ஆர்ஏஎம்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியால் மொத்த கடன்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் (ஒய்ஓஒய்) 16.39% உயர்ந்துள்ளது.

39.36% என்ற ஆரோக்கியமான காசா (சிஏஎஸ்ஏ) விகிதத்தின் ஆதரவுடன் ¬Õப்புத் தொகைகள் 12.50% அதிகரித்துள்ளன.

காலாண்டு அடிப் படையில் (க்யூஓக்யூ), வங்கி தனது மொத்த வைப்புத்தொகையை (சிடி உட்பட) ஜூன்’26 -இல் இருந்த ரூ.1.62 லட்சம் கோடியிலிருந்து செப்டம்பர்’26-இல் ரூ.1.52 லட்சம் கோடியாக திட்டமிட்டு 5.60% குறைத்துள்ளது.

வங்கி புதிதாக ரூ .22,486 கோடி மதிப் பிலான எஃப்சிஎன்ஆர் (பி) வைப்புத்தொகை யைத் திரட்டியுள்ளது. மேலும், ரூ.3806 கோடிக்கு ஓஎஃப்சிபி-யையும் திரட்டியுள்ளது.

மேம்பட்ட செயல் பாட்டுத் திறன், நிலையான நிகர வட்டி வரம்பு (என்ஐஎம்) மற்றும் சிறப்பான செலவின மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நிகர லாபம் முந்தைய ஆண்டின் இதே கால அளவைவிட 14.71% அதிகரித்துள்ளது.

செயல்பாட்டு லாபம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 46.58% உயர்ந்திருக் கிறது.

செப்டம்பர் 2026-ல் முடிவடைந்த காலாண் டில், வங்கியின் வட்டி யல்லாத வருமானம் (என்ஐஐ) ஆண்டுக்கு ஆண்டு (ஒய்ஓஒய்) அடிப்படையில் 59% வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்து, ரூ.3,953 கோடியை எட்டி யுள்ளது.

வங்கியின் செலவு மற்றும் வருவாய் விகிதம் ஜூன்’26-இல் 44.80%-ஆக இருந்ததி லிருந்து 723 அடிப் படைப் புள்ளிகள் (பிபிஎஸ்) முன்னேற்றம் கண்டு, செப்டம்பர்’26இல் 39.25%-ஆக உள்ளது.

மொத்த வாராக் கடன் (ஜிஎன்பிஏ) 1.61% ஆகவும், நிகர வாராக்கடன் (என்என் பிஏ) 0.14% ஆகவும் முன்னேற்றம் கண்டு சொத்துகளின் தரம் மேலும் வலுவடைந் துள்ளது.

மொத்த பரிவர்த் தனைகளில் டிஜிட்டல் பயன்பாடு 96%-ஐ எட்டியிருப்பது, தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் வாடிக்கையாளர்களின் செயல்பாட்டை வெளிப்படுத்துகிறது.

நிகர லாபம் ஆண்டு க்கு ஆண்டு (ஒய்ஓஒய்) 14.71%உயர்ந்து செப்டம்பர்'25-ல் இருந்த ரூ.3018 கோடி யிலிருந்து செப்டம்பர்' 26-ல் ரூ.3462கோடி யாக அதிகரித்துள்ளது.

செயல்பாட்டு லாபம் ஆண்டுக்கு ஆண்டு 46.58% உயர்ந்து செப்டம்பர்' 25-ல் இருந்த ரூ.4837 கோடியிலிருந்து செப் டம்பர்'26-ல் ரூ.7090 கோடியாக அதிகரித் துள்ளது.

செப்டம்பர்'25-ல் ரூ.6551 கோடியாக இருந்த நிகர வட்டி வருமானம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 17.83%உயர்ந்து செப் டம்பர்'26-ல் ரூ.7719 கோடியாக பதிவாகி யிருக்கிறது.

செப்டம்பர்'26-ல் சொத்துகள் மீதான வருவாய் (ஆர்ஓஏ) 1.31%ஆகவும், பங்கு மூலதனம் மீதான வருவாய் (ஆர்ஓஇ) 19.65% ஆகவும் உள்ளது.

கடன்கள் மீதான வருவாய் (ஒய்ஓஏ) செப்டம்பர்' 26-ல் 8.17%ஆக இருந்தது.

---

**Rtn Dr R Sathyanarayanan, Editor | 8148231942 | hellomadras.com**

---